தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**12.08.2013**

## தமிழகம், புதுச்சேரி கடலோர பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் கடலோரப் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்துக்கு கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இடியுடன் மழை: தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வெப்பச் சலனம் காரணமாக சில நாள்களாக மாலை மற்றும் இரவு நேரங்களில் மழை பெய்து வருகிறது. தற்போது, கடலோரப் பகுதிகளில் கனமழை பெய்யக் கூடும் எனவும், பல்வேறு இடங்களில் மழை அல்லது இடியுடன்கூடிய மழை பெய்யும் எனவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பலத்த காற்று வீசும்: வட தமிழகம் மற்றும் புதுச்சேரி கடலோரப் பகுதிகளில் மேற்கு மற்றும் வடமேற்கு திசையிலிருந்து மணிக்கு 45 முதல் 55 கி.மீ வேகத்தில் பலமான தரைக்காற்று வீசும்.

இதுபோல் தென் தமிழக கடலோரப் பகுதிகளில் தென்மேற்கு மற்றும் மேற்கு திசையிலிருந்து மணிக்கு 45 முதல் 55 கி.மீ வேகத்தில் பலமான தரைக்காற்று வீசும் என மீனவர்களுக்கு வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

சென்னையைப் பொருத்தவரை இன்று வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மழை அல்லது இடியுடன்கூடிய மழை பெய்யும்.

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

மேட்டுப்பட்டி (மதுரை மாவட்டம்) - 50, திருச்சி - 40, கரூர் பரமத்தி, சேலம், வாடிப்பட்டி, சோழவந்தான் (மதுரை மாவட்டம்), மணப்பாறை, ஏற்காடு, இழுப்பூர், புதுக்கோட்டை, திருவாரூர், மருங்காபுரி (திருச்சி மாவட்டம்), தஞ்சாவூர், - 30, விருத்தாச்சலம் - 160, சங்கராபுரம் (விழுப்புரம் மாவட்டம்), புதுச்சேரி - 80, அரியலூர், கீரனூர் (புதுக்கோட்டை மாவட்டம்), கடலூர் - 60, கடவூர், திருவிடைமருதூர், கரூர், சிவகாசி, திருமங்கலம், ஆடுதுறை, பாபநாசம் - 20, விராலிமலை (புதுக்கோட்டை), காரைக்கால், நத்தம், பென்னகரம், லால்குடி, ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் - 10.

**வரத்து குறைந்தது; வெங்காயம் விலை உயர்ந்தது**

வெங்காயத்தை இப்போது உரித்தால் மட்டும் கண்ணீர் வருவதில்லை. உயர்ந்து வரும் அதன் விலைகூட கண்ணீரை வரவழைத்து விடுகிறது. தில்லியில் வெங்காயம் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

வெளி மாநிலங்களில் வெங்காயம் விளையும் பகுதிகளில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதால் வெங்காயத்தின் விலை உயர்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

மேலும், உள்நாட்டில் வெங்காயம் வரத்து குறைந்துள்ளதும் விலை உயர்வுக்கு முக்கியக் காரணம் என்று வியாபாரிகள் கூறுகின்றனர்.

தில்லியில் தற்போது ஒரு கிலோ வெங்காயம் ரூ. 55 முதல் ரூ. 66 வரை விற்கப்பட்டு வருகிறது. பஞ்சாப், ஹரியாணா, சண்டீகரில் ஒரு கிலோ வெங்காயம் கிலோ ரூ. 50 முதல் ரூ.55 வரை சில்லறை சந்தைகளில் விற்கப்படுகிறது.

இதனிடையே, தேசியத் தலைநகர் வலயப் பகுதிகளில் உள்ள மதர் டைரியின் 350 சஃபல் மையங்களில் கிலோ வெங்காயம் ரூ.45-க்கு விற்கப்பட்டு வருகிறது.

"கடந்த 1-ஆம் தேதி முதல் தில்லியில் காய்கறிச் சந்தைகளுக்கு வெளிமாநிலங்களில் இருந்து வெங்காய வரத்து குறைந்துள்ளது. கடந்த ஆண்டு தில்லிக்கு 4,153 டன் வெங்காயம் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது. இம்முறை 3,884.50 டன் மட்டுமே வந்துள்ளது. வரத்து குறைந்ததே வெங்காயம் விலை உயர்வுக்கு முக்கியக் காரணம் என்கின்றனர் வியாபாரிகள்.

இது குறித்து தில்லியைச் சேர்ந்த காய்கறி வியாபாரி திவாகர் ஞாயிற்றுக்கிழமை கூறுகையில், "மத்திய பிரதேசத்தில் இருந்து தில்லிக்கு வெங்காய வரத்து குறைந்துள்ளதுதான் விலை உயர்வுக்கான முக்கியக் காரணங்களில் ஒன்று. பற்றாக்குறையைப் போக்கவும், விலை உயர்வைத் தடுக்கவும் வெளிநாடுகளில் இருந்து உடனடியாக வெங்காயத்தை இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

அரசு எச்சரிக்கை: தில்லிக்கு சாலை வழியாக வெங்காயம் வருவதில் பல்வேறு தடைகள் உள்ளன. இதுவும் வெங்காய வரத்து குறைந்துள்ளதற்கு காரணமாகக் கூறப்படுகிறது. எனினும், வெங்காய விலை நிலவரத்தை அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

வெங்காய விலையேற்றத்தால் பொதுமக்களுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படக் கூடாது என்று அதிகாரிகளுக்கு தில்லி முதல்வர் ஷீலா தீட்சித் அண்மையில் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், "வெங்காயத்தை பதுக்கி வைத்திருப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று தில்லிப் பொதுப்பணித் துறை அமைச்சர் ராஜ்குமார் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

தேவையேற்பட்டால் நியாய விலைக் கடைகள் மூலம் வெங்காயத்தை விற்பனை செய்ய மாநில அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

**சிறந்த தோட்டக்கலை விவசாயி விருதுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு**

பெங்களூர் வேளாண் அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில், வழங்கப்பட உள்ள சிறந்த தோட்டக்கலை விவசாயி விருதுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

பெங்களூர் வேளாண் அறிவியல் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: இப்பல்கலைக்கழகம் சார்பில், மாநில அளவிலான டாக்டர் எம்.எச்.மரிகெப்டா நினைவு சிறந்த தோட்டக்கலை விவசாயி விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. 2012-13-ம் ஆண்டுக்கான விருதுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. பழச் செடிகள், காய்கறிச் செடிகள், பூச் செடிகள், மூலிகைப் பண்ணைகள் உள்ளிட்டவற்றை பயிரிட்டு வரும் தோட்டக்கலை விவசாயிகள், விண்ணப்பிக்கலாம். இதற்கான விண்ணப்பங்கள் அந்தந்த மாவட்ட தோட்டக்கலைத்துறை அலுவலகங்களில் கிடைக்கும். அஞ்சல் மூலமாக பெற விரும்புவோர், ரூ.10-க்கான அஞ்சல் தலைகள் ஒட்டப்பட்ட, சுய முகவரி எழுதிய உறையை, மாவட்ட தோட்டக்கலைத் துறைக்கு அனுப்பி வைத்தால், விண்ணப்பங்கள் விவசாயிகளின் வீட்டுக்கே அனுப்பி வைக்கப்படும். ஜ்ஜ்ஜ்.ன்ஹள்க்ஷஹய்ஞ்ஹப்ர்ழ்ங்.ங்க்ன்.ண்ய் என்ற இணையதளத்தில் இருந்தும் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்திக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, செப்டம்பர் 30-ம் தேதிக்குள் பெங்களூர் வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இதில் தேர்வு செய்யப்படும் விவசாயிக்கு, பெங்களூரில் நவம்பர் 3-ம் தேதி நடைபெற உள்ள பன்னாட்டு விவசாயிகள் விழாவில் விருது வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு 080-23418883 என்ற தொலைபேசி எண்ணுக்கு தொடர்புகொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

**வேளாண் அறிவியல் நிலையத்தில்விதை நெல் விற்பனை தொடக்கம்**

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு தேவையான விதை நெல் விற்பனை சனிக்கிழமை தொடங்கப்பட்டது.

காரைக்கால் மாவட்டத்தின் எல்லைக்குள் காவிரித் தண்ணீர் சனிக்கிழமை காலை வந்து சேர்ந்தது.

காரைக்கால் வேளாண் துறை, மாதூர் விதைப் பண்ணை, வேளாண் அறிவியல் நிலையம் உள்ளிட்டவற்றில் விதை நெல் தயாராக இருப்பதாக வேளாண் துறை தெரிவித்துள்ளது.

வேளாண் அறிவியல் நிலையத்தில் விதை நெல் விற்பனையை நிலையத்தின் தலைவர் ஏ. சுரேஷ் தொடக்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில் அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுநர் கா. வேணுகோபால், பண்ணை மேலாளர் தே. பாலசண்முகம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**விவசாயிகள் பயிர் செய்வதை பதிவு செய்ய வலியுறுத்தல்**

காரைக்கால் விவசாயிகள் பயிர் செய்வதை ஆண்டுதோறும் வருவாய்த் துறை சார்பில் பதிவு செய்யும் முறையைக் கொண்டு வர வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

கட்சியின் மாவட்ட குழு கூட்டம் காரைக்காலில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் காரைக்கால் பகுதி விவசாயிகள் வறட்சியாலும், பருவமழையினாலும் ஒவ்வொரு ஆண்டும் பாதித்துவருகின்றனர். விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக புதுச்சேரி அரசு ஹெக்டேருக்கு ரூ. 50 ஆயிரம் வழங்க வேண்டும். வறட்சி போன்ற பேரிழப்பு காலங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு நபருக்கு ரூ. 10 ஆயிரம் வீதம் வழங்க வேண்டும்.

கிராமப்புற வேலை உறுதித் திட்டத்தின்படி ஆண்டுக்கு 100 நாள் கண்டிப்பாக வேலை தரும் வகையில் அரசு நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

மாவட்ட குழு உறுப்பினர் கே. தமிழழகன் தலைமை வகித்தார். புதுச்சேரி மாநில செயலர் ஆர். விஸ்வநாதன், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் பி. தங்கராசு,

மாவட்டச் செயலர் ஆர்.பி. ராஜேந்திரன் உள்ளிட்ட மாவட்டக்குழு உறுப்பினர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நகர செயலராக எஸ். சிதம்பரம், மாவட்ட துணைச் செயலராக வி. வீரராகவன், காரைக்கால் தெற்குத் தொகுதி செயலராக எஸ்.ஏ. முகமது யூசுப், நிரவி திருப்பட்டினம் தொகுதி செயலராக வி. சரவணன் ஆகியோர் புதிய நிர்வாகிகளாக அறிவிக்கப்பட்டனர்.

**"பல்முனை பட்டுநூற்பு இயந்திரம் அமைக்கும் பணி துரிதப்படுத்தப்படும்'**

புதுக்கோட்டையில் அரசு பட்டுக்கூடு அங்காடியில் பல்முனை பட்டுநூற்பு இயந்திரம் அமைக்கும் பணி துரிதப்படுத்தப்படும் என்றார் கைத்தறி மற்றும் கதர்த்துறை முதன்மைச்செயலர் ஹர்மந்தர்சிங்.

புதுக்கோட்டை ராஜகோபாலபுரத்தில் இயங்கிவரும் அரசு பட்டுக்கூடு அங்காடி மற்றும் அரசுபட்டு நூற்பகத்தை சனிக்கிழமை ஆய்வு செய்தபின் மேலும் அவர் கூறியது, புதுக்கோட்டை மாவட்டத்தில் 350 ஏக்கருக்கு மேல் மல்பரி சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகள் தற்போது புதுக்கோட்டை, தர்மபுரி, சேலம், ராம்நகர் பட்டுக்கூடு அங்காடிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், புதுகையில் பல்முனை பட்டு நூற்பு இயந்திரம் அமையவுள்ளதால், இம்மாவட்டத்தில் உற்பத்தியாகும் பட்டுக் கூடுகள் இங்குள்ள அரசுபட்டுக்கூடு அங்காடியிலேயே கொள்முதல் செய்யப்பட்டு நூல் நூற்பு பணிகள் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் இங்குள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்றார்.

ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன், பட்டு வளர்ச்சித்துறை மண்டல துணை இயக்குநர் ஆர். முருகன், உதவி இயக்குநர்(திருச்சி) ஆர். பழனியப்பன், மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி என்.ஜி. செல்வராஜ், கதர் துறை மண்டல துணை இயக்குநர் (திருச்சி) சம்பத்குமார், புதுக்கோட்டை வட்டாட்சியர் எஸ். நாகராஜன், ஆலங்குடி வட்டாட்சியர் கே. கோவிந்தராஜன், பட்டுக்கூடு அங்காடி அலுவலர் அ. பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 16,912 கன அடியாக ஞாயிற்றுக்கிழமை குறைந்தது. அணைக்கு சனிக்கிழமை நொடிக்கு 25,890 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்த பலத்த மழையின் காரணமாக கர்நாடகத்தில் உள்ள அணைகள் நிரம்பின. அந்த அணைகளின் பாதுகாப்பு கருதி அங்கிருந்து உபரி நீர் வெளியேற்றப்பட்டது.

இதனால், கடந்த 4-ஆம் தேதி மேட்டூர் அணை நிரம்பியது. அணையின் நீர்மட்டம் 121 அடியாக உயர்ந்தது. தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்ததால், அணையின் உபரி நீர்ப் போக்கி வழியாக உபரி நீர் திறந்துவிடப்பட்டது.

கடந்த இரு நாள்களாக கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை குறைந்ததால், அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீர் குறைக்கப்பட்டது. இதன் காரணமாக, மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு படிப்படியாகக் குறைந்து வந்தது.

இதையடுத்து, மேட்டூர் அணையிலிருந்து வெளியேற்றப்பட்டு வந்த உபரி நீர் முழுவதுமாக ஞாயிற்றுக்கிழமை நிறுத்தப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை மாலை அணைக்கு நொடிக்கு 16,912 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. பாசனத்துக்கு நொடிக்கு 18 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. நீர்வரத்தைவிட திறப்பு அதிகமாக இருந்ததால், ஒரு வாரத்திற்குப் பிறகு மேட்டூர் அணையின் நீர்மட்டம் 119.99 அடியாகக் குறைந்தது.

**சொட்டுநீர் பாசனத்தில் தர்பூசணி சாகுபடி!**

வறட்சி காரணமாக சத்தியமங்கலம் பகுதியில் சொட்டுநீர் பாசனம் மூலமாக தர்பூசணி சாகுபடி செய்யப்படுகிறது.

சத்தியமங்கலம் வட்டாரப் பகுதியில் விவசாயம் முக்கியத் தொழிலாக உள்ளது. சிக்கரசம்பாளையம், புதுகுய்யனூர், வடவள்ளி, ராஜன் நகர், இக்கரை நெகமம்புதூர் உள்ளிட்ட விளை நிலங்களில் மல்லிகை பூ சாகுபடி செய்தபோதிலும், தற்போது விவசாயிகள் தர்பூசணியை ஆர்வத்துடன் பயிரிட்டுள்ளனர்.

நடப்பாண்டு பருவமழை பொய்த்துவிட்டதால், கிணறுகளில் நீர்மட்டம் அதலபாதாளத்துக்குச் சென்றுவிட்டது. இதனால் விவசாயிகள் கிணற்றில் கிடைக்கும் நீரைக் கொண்டு சிக்கனமாக விவசாயம் செய்து வருகின்றனர். சிக்கரம்பாளையம், புதுவடவள்ளி பகுதிகளில் கார அமிலத்தன்மை கொண்ட மணற்சாரி நிலம் இருப்பதால், விவசாயிகள் தர்பூசணி சாகுபடி செய்துள்ளனர்.

தோட்டங்களில் பாலித்தீன் பேப்பர் மூலமாக சொட்டுநீர் பாசனம் அமைத்து, நீர் பயன்பாட்டை சிக்கனமாக்கி, நிறைவான மகசூல் பெறுகின்றனர். ஏக்கருக்கு 30 டன் மகசூல் கிடைப்பதால், ரூ.50 ஆயிரம் வரை வருமானம் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

60 நாள்களில் அறுவையாகும் புதிய ரக தர்பூசணிக்கு உரம், மருந்துகள் சொட்டுநீர் மூலமாக பாய்ச்சுவதால் உரம் வீணாவதில்லை. பயிருக்கு மட்டுமே தண்ணீர் செல்வதால், களை எடுப்பு பணியும் இல்லை. அதிக நீர்ச் சத்துள்ள தர்பூசணியை அனைத்துப் பருவங்களிலும் மக்கள் பயன்படுத்துவதால், இதன் தேவை அதிகமாகி வருகிறது.

வியாபாரிகள் நேரடியாக கொள்முதல் செய்து, உடனடியாக பணம் பட்டுவாடா செய்வதால், விவசாயிகள் தர்பூசணியை ஆர்வத்துடன் சாகுபடி செய்து வருகின்றனர்.

**வறட்சி பாதித்த தென்னை விவசாயிகளுக்கு முழு இழப்பீடு வழங்கக் கோரி தீர்மானம்**

வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு முழு இழப்பீட்டையும் வழங்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

விவசாயிகள் சங்கத்தின் (கட்சி சார்பற்றது) செயற்குழுக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் சங்கத் தலைவர் வழுக்குப்பாறை பாலு, பொதுச் செயலாளர் பி.கந்தசாமி ஆகியோர் முன்னிலையில் நடந்தது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

கால்நடை பராமரிப்புத் துறையில் அறுவடை இயந்திரம், தீவனம் நறுக்கும் கருவி போன்ற இயந்திரங்கள் ஒரு அலகு மட்டுமே மானியத்தில் வழங்கப்படுகிறது. இது போதுமானதாக இல்லை. எனவே, தேவைப்படுவோர் அனைவருக்கும் மானியத்தில் இதனை வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு ஏக்கருக்கு ரூ. 4,000 வீதம் (மரம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம்) நிவாரணம் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது. இந்த நிவாரணத் தொகை மிகவும் குறைவாக உள்ளது. வறட்சி பாதித்த தென்னை மரங்களுக்கு முழு இழப்பீட்டையும் வழங்க வேண்டும்.

அரசு சார்பில் அறிவிக்கப்பட்ட குறைந்த நிவாரணத் தொகையைக் கூட கோவை மாவட்ட விவசாயிகளுக்கு வழங்காதது வருத்தமளிக்கிறது என்பது உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மழை பெய்யாததால் கொடைக்கானலில் பேரிக்காய் விளைச்சல் கடும் பாதிப்பு**

கொடைக்கானலில் எதிர் பார்த்த மழை பெய்யாததால் பேரிக்காய் விளைச்சலில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குறைந்த அளவு விளைந்த பேரிக்காய்களை வெளி மாநிலங்களுக்கு அனுப்பும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

கொடைக்கானல் சுற்றுலா தளம் மட்டுமல்ல. அதே நேரத்தில் காய்கறிகளும் பழவகைகளும் இங்கு விளைவிக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

கொடைக்கானல் மட்டுமல்லாது அதனை சுற்றி உள்ள செண்பகனூர், பிரகாசபுரம், வில்பட்டி, அட்டுவம்பட்டி, பள்ளங்கி, கோம்பை, சின்னப்பள்ளம், பெரும்பள்ளம், அப்சர்வேட்டரி, வட்டக்கானல், இருதயபுரம் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் கேரட், உருளை, பீன்ஸ், முள்ளங்கி, பீட்ரூட், காலிபிளவர் போன்றவைகள் விவசாய நிலங்களில் ஊடுபயிராக பயிரிடப்படுகின்றன.அத்துடன் நூற்றுக்கணக்கான பேரிக்காய் மரங்களும் வளர்க்கப்பட்டு வருகின்றன.

தற்போது கொடைக்கானலில் ஜூன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை பேரிக்காய் சீசனாகும். பேரிக்காயில் தண்ணீர் பேரி, சீனி பேரி, முள்பேரி, ஊட்டி பேரி, வால் பேரி ஆகிய வகைகள் உள்ளன. மழை எந்த அளவிற்கு பெய்து தண்ணீர் கிடைக்கிறதோ அந்த அளவிற்கு பேரிக்காய் விளைச்சல் அமோகமாக இருக்கும். விளைந்த பேரிக்காய்களை எடுப்பதற்காக திண்டுக்கல், தேனி, புதுக்கோட்டை, திருச்சி, நத்தம் ஆகிய வெளி மாவட்டங்களைச் சேர்ந்த 500-க்கும் மேற்பட்டவர்கள் 4 மாதங்களாக கொடைக்கானலில் தங்கிஇப்பணியில் ஆண்டு தோறும் ஈடுபடுவார்கள்.

கொடைக்கானல் பேரிக்காய்க்கு எப்போதும் தனி சிறப்பு உண்டு. இதனை சுற்றுலா பயணிகள் அதிகமாக வாங்கிச் செல்வது வழக்கம். தண்ணீர் சத்து அதிகமாக இருப்பதால் இது எளிதில் ஜீரணமாகும் சக்தி கொண்டது. பேரிக்காய்கள் தமிழகம் மட்டுமல்லாமல் கேரளாவிற்கும் அதிக அளவில் கொண்டு செல்லப்படுகிறது. தற்போது 50 கிலோ எடை கொண்ட பேரிக்காய் மூடை ரூ. 400 முதல் ரூ. 500 வரை விற்கப்படுகிறது. இந்தாண்டு சரியான மழை பெய்யாததால்

பேரிக்காய் விளைச்சல் சற்று குறைந்தே காணப்படுகிறது. ஆனால் எதிர் பார்த்த விலை கிடைத்திருப்பதால் மொத்த வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இது குறித்து கொடைக்கானல் பகுதிகளில் உள்ள விவசாயிகள் கூறும் போது, கொடைக்கானல் பகுதிகளில் இந்தாண்டு பருவ மழை பொய்த்ததால் பேரிக்காய் விளைச்சல் குறைந்துள்ளது. மேலும் நாளுக்கு நாள் விவசாய நிலங்கள் குறைந்து காட்டேஜ்களும்,லாட்ஜ்களும் பல அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருவதால் பேரி மரங்கள் அழிந்து வருகின்றன.

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன் சீசன் காலங்களில் ஒரு நாளைக்கு 15 முதல் 20 லாரிகளில் மூடை மூடையாக பேரிக்காய்கள் தமிழகம் மட்டுமல்லாது வெளி மாநிலங்களுக்கும் கொண்டு செல்லப்படும். ஆனால் தற்போது பிக் அப் ஜீப்புகளில் மார்க்கெட்டிற்கும், வெளி மாநிலங்களுக்கும் கொண்டு செல்லப்படுகிறது. தொடர்ந்து இதே நிலை நீடித்தால் வரும் ஒரு சில ஆண்டுகளில் கொடைக்கானலில் பேரிக்காய் மரங்கள் முற்றிலுமாக அழிந்து விடும் என்பதில் ஐயமில்லை என்றனர்.

தோட்டக்கலைத் துறை அதிகாரி ஒருவர் கூறும் போது, கொடைக்கானல் பகுதிகளில் பேரி, பிளம்ஸ், பீச்சஸ் நாற்றுகள் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறோம். இது குறித்து ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் விவசாய நிலங்கள் விற்பனை செய்யப்படும் போது மரங்கள் அழிக்கப்படாதவாறு பாதுகாக்க வேண்டும்.

விவசாய நிலங்களில் அனுமதி பெற்ற பிறகே குறிப்பிட்ட அளவில் வீடுகள் கட்ட வேண்டும். ஆனால் மலைப் பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் பல அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்டுவதற்கு எப்படி அனுமதி கொடுக்கப்படுகிறது எனத் தெரியவில்லை இதனால் பல வகையான மரங்கள் அழிக்கப்பட்டு வருகிறது. இதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**சாத்தையாறு பகுதியில்52 மி.மீட்டர் மழை பதிவு**

மதுரை மாவட்டம், சாத்தையாறு பகுதியில் சனிக்கிழமை மட்டும் 52 மில்லி மீட்டர் அளவுக்கு மழை பதிவாகியுள்ளது.

மதுரை மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது. இந்நிலையில், சனிக்கிழமை இரவு சாத்தையாறு, அலங்காநல்லூர் பகுதிகளில் கனமழை பெய்தது. சில இடங்களில் ஆலங்கட்டி மழை பெய்தததாகவும் கூறப்படுகிறது. மாவட்ட அளவில் பெய்த மழை அளவு விவரம் (மில்லி மீட்டரில்): ஆண்டிப்பட்டி-10.8, மதுரை 6.8, மேட்டுப்பட்டி 49, கள்ளந்திரி 4, சிட்டம்பட்டி 3, மேலூர் 1.சேதமடைந்த சாலைகள்: மதுரை நகரில் சனிக்கிழமை பெய்த மழையில் பெரும்பாலான சாலைகள் சேதமடைந்தன. கனகவேல் காலனி பகுதியில் உள்ள பிரதான சாலை மிகவும் சேதமடைந்து காணப்பட்டது. சாலை பள்ளங்களில் மழை நீர் தேங்கியதால், வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்பட்டனர்.
நகரில் சாலைகள் சீரமைக்கப்பட்டு நல்ல நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கும் மாநகராட்சி நிர்வாகம், கனகவேல் காலனி, பூந்தோட்டம் உள்ளிட்ட பகுதிகளின் சாலைகளை செப்பனிட நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

**விளைநிலங்களைப் பாதுகாக்கக் கோரிக்கை**

விளைநிலங்களை வீட்டு மனைகளாக மாற்றுவதைத் தடை செய்வதுடன் அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என கூட்டுக்குரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.அமைப்பின் மாதாந்திரக் கூட்டம் வில்லியனூரில் சனிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு தலைவர் லலிதாம்பாள் தலைமை தாங்கினார். கிராமப்புற பெண்களுக்கு அரசு வேலைவாய்ப்பு உருவாக்கித் தரவேண்டும், பஞ்சாயத்துராஜ் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இக் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக டெய்சிராணி மற்றும் நாகஜோதி, கஸ்தூரி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**12.08.2013**

## வறட்சியால் ரோஜா ஏற்றுமதி...கேள்விக்குறி சாகுபடி பரப்பு 50 % சரிவு

ஓசூர்: ஓசூர் தாலுகாவில், வறட்சியால் ரோஜா சாகுபடி பரப்பு, 50 சதவீதம் குறைந்துள்ளது. இதனால், நடப்பாண்டு கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் காதலர் தினத்தில் ரோஜா ஏற்றுமதி கேள்வி குறியாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், பேரிகை, பாகலூர், சூளகிரி, தளி, கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை மற்றும் ராயக்கோட்டை உள்ளிட்ட மாவட்டம் முழுவதும் பரவலாக விவசாயிகள், 5,000 ஹெக்டேரில் ரோஜா, ஆஸ்டர், ஜெர்பரா, செண்டுமல்லி, சாமந்தி உள்ளிட்ட பல்வேறு வகை அலங்கார மலர்கள் சாகுபடி செய்தனர்.

இவற்றில், 5,000 ஏக்கரில் மட்டும் திறந்த வெளி மற்றும் பசுமை குடோன் முறையில் விவசாயிகள் ரோஜா சாகுபடி செய்தனர். ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவை பொறுத்தவரையில், ரோஜா சாகுபடி முழுக்க, முழுக்க ஏரிகள், குளங்கள் நீர் ஆதாரத்தை கொண்டு ஆழ்துளை கிணறுகள் மூலம் சொட்டு நீர் பாசனத்தில்நடக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டாக ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் முற்றிலும் பருவமழை ஏமாற்றியது. அதனால், ஏரிகள், குளங்கள் வறண்டு ஆள்துளை கிணறுகளில் தண்ணீர் இல்லை. ரோஜா செடிகளுக்கு பருவம் தவறாமல் தண்ணீர் பாசனம், மருந்து உள்ளிட்ட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

தற்போது, கூலி வேலைக்கு ஆட்கள் தட்டுப்பாடு, மருந்து பொருட்கள் விலை உயர்வு, நீர் பாசனம் பற்றாக்குறையால், ரோஜா செடிகளை விவசாயிகளால் முழுமையாக பராமரிக்க முடியவில்லை. கடந்த இரு மாதத்துக்கு முன், ஓசூர், பேரிகை, பாகலூர், சூளகிரி, உத்தனப்பள்ளி, ராயக்கோட்டை பகுதியில் பலத்த சூறாவளிகாற்று வீசியது.

இந்த காற்றில் பல லட்சம் ரூபாய் மதிப்பில் ரோஜா பண்ணைகளில் போடப்பட்டிருந்த பசுமை குடோன்கள், கிழிந்து நாசமடைந்தது. தமிழ்நாடு அரசு தோட்டக்கலைத்துறை, இதுவரை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்காததால், ரோஜா விவசாயிகள் மாற்று விவசாயத்திற்கு மாறிவிட்டனர்.

அதனால், நடப்பாண்டு ரோஜா சாகுபடி, 50 சதவீதம் குறைந்துள்ளது. மேலும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் அளவுக்கு, ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் முன் போல் ரோஜா பூக்கள் தரமாக உற்பத்தியாகவில்லை. அமுதகொண்டப்பள்ளி டான்ஃப்ளோரா அரசு சார்பு பண்ணை மற்றும் சில தனியார் மலர் பண்ணைகளில் மட்டுமே பெயரளவுக்கு வெளிநாட்டு ரோஜா ஏற்றுமதி நடக்கிறது. அதனால், நடப்பாண்டு ஓசூரில் இருந்து கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் காதலர் தின வெளிநாட்டு ஏற்றுமதி கேள்விகுறியாகியுள்ளது.

* மனு கொடுக்க முடிவு: பேரிகை அடுத்த குடிசெட்லுவில் ஓசூர் தாலுகா சிறு, குறு விவசாயிகள் சங்க தலைவர் சிவா தலைமையில் நேற்று விவசாயிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது.

இது குறித்து சங்க தலைவர் சிவா கூறியதாவது:

கடந்த பத்து ஆண்டாக மழையில்லை. கடந்த இரு ஆண்டாக மின்சாரம் பிரச்னை. தவணை கட்டாததால் விவசாயிகள் டிராக்டர்கள் வங்கிகள் ஜப்தி செய்து ஏலம் விடுகின்றனர். பேரிகை, பாகலூர், சூளகிரி பகுதியில், 20 ஏரிகள் உள்ளன.

இந்த ஏரிகள் நீர் ஆதாரத்தை நம்பியே இப்பகுதியில் ஒரு லட்சம் ஹெக்டேர்

விவசாயம் நடக்கிறது. அதனால், மழைகாலத்தில் இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை ஏரிகளை நிரப்ப வேண்டும். வங்கி கடன்களை ரத்து செய்ய வேண்டும். நாளை (ஆக.,12) கலெக்டரை சந்தித்து மனு வழங்கி கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் செய்வோம். இவ்வாறு கூறினார்.

## வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தம் பண பயிர் விவசாயம் கேள்விக்குறி

ஈரோடு: காலிங்கராயன் வாய்க்காலில் மூன்றரை மாதங்களுக்கு முன்னதாகவே தண்ணீர் நிறுத்தப்படுவதால், பண பயிர் விவசாயம் கேள்விக்குறியாகி உள்ளது. அடுத்தாண்டும், இதே நிலை தான் தொடரும், என விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். காலிங்கராயன் அணைக்கட்டில் இருந்து கடந்த, 9ம் தேதி பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. கான்கிரீட் தள பணிகள் மற்றும் அணையில் போதிய நீர் இருப்பு இல்லாமை போன்ற காரணங்களால் நீர் திறப்பு தாமதமானது. வழக்கமாக ஜூன், 15ம் தேதி வாய்க்காலில் நீர் திறக்கப்பட வேண்டும். ஏப்ரல், 30ம் தேதி வரை ஆண்டுதோறும் தொடர்ந்து, 10.5 மாதங்கள் நீர் திறக்கப்படும். ஆனால் இந்தாண்டு ஆகஸ்ட், 15ம் தேதியன்று தண்ணீர் திறந்து விட தீர்மானிக்கப்பட்டு இருந்தது. ஆனால் அதற்கு முன்னதாகவே தண்ணீர் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் விடுத்த கோரிக்கையை தொடர்ந்து, பவானி சாகர் அணையின் நீர் இருப்பு நிலவரத்தை கருத்தில் கொண்டு, ஆகஸ்ட் ஒன்பதாம் தேதியே நீர் திறக்கப்பட்டது. ஜனவரி எட்டாம் தேதி வரை நீர் திறக்கப்படும், என்று அறிவிக்கப்பட்டது.

இதன் மூலம், 15,743 ஏக்கர் பாசனம் பயன் பெறும். நெல் மட்டுமின்றி பண பயிர்களான வாழை, மஞ்சள், கரும்பு பயிரிடுவது வழக்கம். குறிப்பாக நெல் நடவு பரப்புக்கு இணையாக மஞ்சள் அதிகளவில் பயிரிடப்படும். இந்தாண்டு, 150 நாட்களுக்கு மட்டுமே தண்ணீர் திறக்கப்படும் என்ற அறிவிப்பால், ஒன்பது மாதங்களில் பலன் தரும் பண பயிர்களை நடவு செய்ய முடியாத நிலை

விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

கான்கிரீட் தளப்பணி காரணமாக, அடுத்தாண்டும் இதே நிலை நீடிக்கும் என்பதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.நெல் விளைச்சல் அதிகரிக்கும் அதே வேளையில், மஞ்சள், வாழை, கரும்பு உள்ளிட்டவை விளைச்சல் குறையும். இதனால் தேவை அதிகரித்து விலையேற்றத்துக்கு வழி வகுக்கும்.

இதுகுறித்து தலைமடை காலிங்கராயன் பாசன சங்க தலைவர் ரமேஷ் கூறியதாவது:

ஆண்டுதோறும் ஜூன், 15ம் தேதி அணையை திறந்து ஏப்ரல், 30ம் தேதி வரை தண்ணீர் விட வேண்டும். ஆனால் ஜனவரி, 8ம் தேதியே நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது நெல்லுக்காக மட்டுமே நீர் திறக்கப்பட்டுள்ளது. வாழை, மஞ்சள், கரும்பு ஆகியவை, 9 மாத பயிர்கள். நெல் மட்டுமின்றி இப்பண பயிர்களும் பாசன பகுதியில் பயிரிடப்படும்.

ஆனால் இந்தாண்டு நெல்லுக்கு மட்டுமே நீர் திறக்கப்பட்டு இருப்பதால் விவசாயிகள் வேறு பண பயிர்களை பயிரிட முடியாது. கடந்த நான்கு ஆண்டுகளாகவே, ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நீர் திறப்பு நாட்கள் அதிகரிப்பை, அதிகாரிகள் வெளியிடுகின்றனர்.

விவசாயிகள் பயிர் நடவு குறித்து முடிவு செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. நீர் வினியோக குளறுபடியால் மஞ்சள் ஏற்றுமதி பாதிக்கப்படும். இது விவசாயிகளுக்கு மட்டுமின்றி அரசுக்கும் நஷ்டத்தை ஏற்படுத்தும்.

ஏப்ரல், 30ம் தேதி வரை தண்ணீர் திறக்கப்பட வேண்டும். இதற்கான அறிவிப்பை உடனடியாக அதிகாரிகள் தெரிவிக்க வேண்டும். கான்கிரீட் தள பணிகளால் அடுத்தாண்டும் பண பயிர்களை விவசாயிகள் நடவு செய்ய முடியாத நிலையே ஏற்படும். கான்கிரீட் தளம் அமைக்கும் பணியை அதிகளவிலான ஒப்பந்ததாரர்களுக்கு பிரித்து கொடுத்தால், பணிகள் விரைந்து முடியும், என்றார்.

## கொப்பரை தேங்காய் ரூ.60 லட்சத்துக்கு ஏலம்

பெருந்துறை: பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனை கூட்டுறவு சங்கத்தில் வாரந்தோறும் சனிக்கிழமை கொப்பரை தேங்காய் ஏலம் நடப்பது வழக்கம். கடந்த ஜூலை, 28ம் தேதியும், நேற்று முன்தினமும் கொப்பரை தேங்காய் ஏலம் நடந்தது. கடந்த, 3ம் தேதி நடக்க வேண்டிய ஏலம், ஆடி, 18 பண்டிகையால் நடக்கவில்லை. நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், பெருந்துறை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதியில் இருந்து வந்த வியாபாரிகள் பங்கேற்றனர். மொத்தம், 2,614 மூட்டைகளில், ஒரு லட்சத்து, 30 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய் கொண்டு வரப்பட்டது.

முதல் தரம் கொப்பரை தேங்காய் ஒரு கிலோ, 46.85 ரூபாய் முதல், 49.10 ரூபாய் வரை ஏலம் போனது. இரண்டாம் தரம் கொப்பரை தேங்காய், 32.95 ரூபாய், முதல், 46.65 ரூபாய் வரை ஏலம் போனது. கடந்த ஏலத்துக்கும், இந்த வார ஏலத்துக்கும், விலையில் மாற்றம் இல்லை. மொத்தம், 60 லட்சம் ரூபாய்க்கு கொப்பரை தேங்காய் விற்பனையானதாக, சங்கத்தலைவர் அருள்ஜோதிசெல்வராஜ் தெரிவித்தார்.

## வெல்லம் விலை உயர்வு மகிழ்ச்சியில் விவசாயிகள்

வேலாயுதம்பாளையம்: வெல்லத்துக்கு திடீரென விலை உயர்ந்துள்ளதால், கரூர் மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். கரூர் மாவட்டம் நொய்யல், மரவாபாளையம், வேட்டமங்கலம், ஓரம்பாளையம், ஓலப்பாளையம், நல்லிக்கோவில், சேமங்கி, கொளத்துப்பாளையம், நடையனூர், திருக்காடு துறை, புன்செய்புகளூர் உள்ளிட்ட பல்வேறு குதிகளில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. நொய்யல், சோளக்காளி பாளையம், அண்ணாநகர், பிலிக்கல்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் வெல்லம் தயாரிக்கப்படுகிறது. கர்நாடகா, ஆந்திரா, கேரளா, உத்திரபிரதேசம், மத்திய

பிரதேசம், உத்ராஞ்சல், சண்டிகார் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கு லாரி மூலம் வெல்லம் அனுப்பி வைக்கப்படுகிறது.

கடந்த வாரங்களில் உருண்டை வெல்லம் ஒரு சிப்பம் (30 கிலோ) 1,059 ரூபாய் வரையிலும், அச்சு வெல்லம் ஒரு சிப்பம் 1,050 ரூபாய் வரையிலும் ஏலம் போனது. நடப்பு வாரம் ஏலத்தில் 30 கிலோ கொண்ட உருண்டை வெல்லம் சிப்பம் 1,150 ரூபாய் வரையிலும், 30 கிலோ கொண்ட அச்சு வெல்லம் 1,200 ரூபாய்க்கும் விலை போனது. வெல்லம் சிப்பம் ஒன்றுக்கு 50 ரூபாய் முதல் 100 ரூபாய் விலை அதிகரித்துள்ளதால், விவசாயிகள் உற்பத்தியை விறுவிறுப்பாக துவங்கியுள்ளனர்.

## வேளாண்மை பொறியியல் துறை கருவிகள் பெற அலைச்சல்: அலுவலகத்தை மாற்ற கோரிக்கை

திருக்கழுக்குன்றம்:வேளாண்மை பொறியியல் துறை மூலம் வழங்கப்படும் விவசாய பொறியியல் கருவிகளை பெறுவதற்காக, சென்னைக்கு செல்ல வேண்டியுள்ளதால், அந்த அலுவலகத்தை, திருக்கழுக்குன்றத்திற்கு மாற்ற வேண்டும் என, விவசாயிகள் கோரி உள்ளனர். காஞ்சிபுரம் மாவட்டம் காஞ்சிபுரம், மதுராந்தகம், நந்தனம் ஆகிய 3 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு வேளாண் பொறியியல் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஒன்றியங்கள் காஞ்சிபுரம் மண்டலத்தில் காஞ்சிபுரம், உத்திரமேரூர், வாலாஜாபாத், ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியங்களும் மதுராந்தகம் மண்டலத்தில் மதுராந்தகம், லத்தூர், சித்தாமூர், அச்சிறுப்பாக்கம் ஆகிய ஒன்றியங்களும், நந்தனம் மண்டலத்தில் திருக்கழுக்குன்றம், திருப்போரூர், காட்டாங்குளத்தூர், குன்றத்தூர், புனித தோமையர்மலை ஆகிய ஒன்றியங்களும் உள்ளன. நடைமுறை

இந்த பகுதிகளில் உள்ளவர்கள் வேளாண்மை பொறியியல் துறை மூலம் வழங்கப்படும் விவசாய தொழில்நுட்ப கருவிகளை பெறுவதற்கு அந்தந்த மண்டலங்களில் முன்பதிவு செய்ய வேண்டும்.

இந்நிலையில் நந்தனம் மண்டலத்தில் உள்ள குன்றத்தூர், புனித தோமையர்மலை ஆகிய ஒன்றியங்கள் நகரமாக வளர்ச்சி பெற்று விவசாயம் குறைந்து விட்டது. 15 ஊராட்சிகள் மாநகரத்துடன் இணைக்கப்பட்டு விட்டன.

காட்டாங்குளத்தூர், திருப்போரூர் வட்டத்திலும் தொழிற்சாலைகள், குடியிருப்புகள் ஆகியவை வளர்ந்து விவசாயம் குறைந்து வருகிறது.

திருக்கழுக்குன்றம் மட்டும் விவசாயத்திற்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது. இப்பகுதியில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் நெல், கரும்பு, மணிலா, காய்கறிகள் போன்றவை பயிரிடுகின்றனர். அவசியம் இதனால், விவசாயத்திற்கான பொறியியல் இயந்திரங்கள், கருவிகள், மானியங்கள் போன்றவை விவசாயிகளுக்கு அத்தியாவசியமாக உள்ளது. விவசாயிகளுக்கு, இவற்றை வழங்கும் வேளாண்மை பொறியியல்  துறை நந்தனத்தில் இயங்குகிறது. திருக்கழுக்குன்றம் பகுதி விவசாயிகள், மானிய விவரங்களை அறிதல், விண்ணப்பித்தல், பங்கு தொகை செலுத்துதல், மானிய பட்டியலில் பெயர் சேர்க்கை விவரம் அறிதல், மானியம் பெறுதல், வாடகை இயந்திரங்கள் பெறுதல் ஆகியவற்றிற்காக சென்னைக்கு செல்ல வேண்டியுள்ளது.

பாதிப்பு இதனால் பணம் மற்றும் கால விரயம் போன்ற பிரச்னைகளால் விவசாயிகள் கடுமையாக  பாதிக்கப்படுகின்றனர். எனவே, சென்னை நந்தனத்தில் இயங்கும் வேளாண்மை பொறியியல் மண்டல அலுவலகத்தை, விவசாயம் நடைபெறுகின்ற, திருக்கழுக்குன்றம் வட்டத்திற்கு மாற்ற வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## மானாவாரி பயிராக பாபட்லா நெல் சாகுபடி வேடல் விவசாயிகள் ஆர்வம்

காஞ்சிபுரம்:வேடல் கிராமத்தில், மானாவாரி பயிராக, பாபட்லா நெற் பயிரை விவசாயிகள், 100 ஏக்கர் பரப்பளவில் விதைத்துள்ளனர்.

சென்னை - பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது வேடல்

கிராமம். இங்குள்ள பெரிய ஏரியை பயன்படுத்தி, 400 ஏக்கர் நன்செய் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. பருவ மழையின் போது, ஏரி நிரம்பினால், மேற்கண்ட நிலங்கள் இரண்டு போகம் விளையும். ஆனால், சில ஆண்டுகளாக ஏரி நிரம்பாததால், விவசாயிகள் தங்களது நன்செய் நிலங்களை, புன்செய் நிலமாக மாற்றிக் கொண்டனர். இதில், மானாவாரி பயிர்களான துவரை, காராமணி, வேர்க்கடலை, உளுந்து உள்ளிட்ட பயிர்களை, ஆண்டுதோறும் பிப்ரவரி மாதத்தில் விதைக்கின்றனர். இவைகள், மே மாதத்தில் அறுவடை செய்யப்படும். அதை தொடர்ந்து, தென்மேற்கு பருவ மழையின் போது, இந்த நிலங்களில், நெல் விதைகளை விதைத்து வருகின்றனர். தற்போது ஆடிப்பட்டத்தில் (சம்பா) பாபட்லா நெற்பயிரை விதைத்துள்ளனர். இதுகுறித்து, அப்பகுதி விவசாயிகள் கூறுகையில், "தண்ணீர் இல்லாததால், நன்செய் நிலத்தை, மானாவாரி நிலமாக மாற்றி, நெற்பயிரை விதைக்கிறோம். தற்போது ஆடிப்பட்டத்தில் (சம்பா) பாபட்லா நெற்பயிரை விதைத்து உள்ளோம்.

அனைத்து விதைகளும் முளைத்துள்ளன. மழையை பொறுத்துதான், பயிர்கள் கைக்கொடுக்குமா அல்லது நஷ்டத்தை ஏற்படுத்துமா என்பது தெரிய வரும். ஒரு ஏக்கருக்கு, 7,000 ரூபாய் வரை செலவு செய்துள்ளோம். நெல் விதைகளை, கொரு கலப்பை மூலம் ஒரே சீராக விதைத்துள்ளோம்,' என்றார்.

## தடுப்பணைகள் அமைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி:மழைநீரை சேமிக்க மாநில அரசு புதிய முயற்சி

விழுப்புரம்:மழை மற்றும் வெள் ளநீரை சேமிக்க சிற்றாறுகள் மற்றும் ஓடைகளின் நடுவே அரசு சார்பில் தடுப்பணைகள் கட்டுவது, விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.தமிழகத்தின் மிகப்பெரிய மாவட்டமான விழுப்புரத்தில், 34 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். தொழிற்சாலைகள் அதிகம் இல்லாத மாவட்டமாக விழுப்புரம் உள்ளது. இதனால் விவசாயம் மட்டுமே

மக்களின் பிரதான தொழிலாக உள்ளது.மாவட்டத்தில் பருத்தி, கரும்பு, மணிலா, மரவள்ளி போன்ற பயிர்கள் சாகுபடி செய்ய ஏற்ற கரிசல்மண், வண்டல்மண் மற்றும் செம்மண் வகை நிலங்களும், நெல் சாகுபடி செய்ய களிமண் மற்றும் வண்டல் மண் நிறைந்த பகுதிகளும் அதிகம் உள் ளன. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பிரதானமாக நெல் பயிர் சாகுபடி செய்யப்படுகின்றது.ஆண்டு முழுவதும் தண்ணீர் தேக்கி வைக்கும் அளவிற்கு, இம்மாவட்டத்தில் பெரிய அணைகள் அல்லது ஏரிகள் ஏதுமில்லை. இருப்பினும் அதிக நிலப்பரப்பு ஏரி மற்றும் கால்வாய் பாசனத்தை நம்பியே உள்ளன.மாவட்டத்தில் உள்ள முக்கிய அணைகள் நிரம்பினால், அதிகளவு ஆறு முதல் ஏழு மாதங்கள் வரை மட்டுமே பாசனத்திற்கு தண்ணீர் பெற முடியும். இதனால் ஓர் ஆண்டில் ஆறு மாதங்கள் பாசன வசதி இல்லாததால், பெரும்பாலான விவசாய நிலங்கள் தரிசாகவே காணப்படுகின்றன.மாவட்டத்தின் பிரதானமாக விளங்கும் தென்பெண்ணை ஆற்றில் அதிக ஆழம் வரை மணல் எடுக்கப்பட்டு, வறண்ட பாலைவனம் போல் ஆற்றுப்பகுதி காட்சியளிக்கிறது. மழை மற்றும் வெள்ளநீர் தேங்கி நிற்க வாய்ப்பு இல்லாமல், உடனடியாகச் சென்று கடலில் கலந்து வீணாகிறது.இதனால் பாசனத்திற்கு மட்டுமின்றி, கோடை காலத்தில் குடி நீருக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதனையடுத்து மழைநீர் சேகரிப்பு மையங்களை அமைக்க பல்வேறு துரித நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டுள்ளது.விழுப்புரம் மாவட்டத்தில் சிற்றாட்சிகள் மற்றும் வாய்க்கால்களின் குறுக்கே தடுப்பணைகள் அமைக்கும் பணிகளை அரசு மேற்கொண்டுள்ளது.தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தென் பெண்ணையாற்றிலிருந்து பிரிந்து செல்லும் ஆழங்கால் வாய்க்காலின் விழுப்புரம் அடுத்த மேலமேடு ஆழங்கால் வாய்க்கால், பிடாகம் மற்றும் சாமி பேட்டை ஆகிய 3 இடங்களில் தலா 7 லட்சம் ரூபாய் மதிப்பில் தடுப்பணைகள் கட்டப்படுகின்றது. மழை மற்றும் வெள்ள நீர் இந்த வாய்க்காலில் வரும் போது அரை மீட்டர் உயரத்திற்கு கட்டப்பட்டுள்ள தடுப்பணைகளில்,

தண்ணீர் தேங்கி நிற்கும். உபரியாக வரும் நீர் தடுப்பணைகளை கடந்து வளவனூர் ஏரிக்கு சென்று சேரும். இதனால் தண்ணீர் வீணாக்கப்படுவது தவிர்க்கப்பட்டு, தடுப்பணைகளில் தேங்கி நிற்கும் தண்ணீரால், நிலத்தடி நீர் மட்டம் உயரும். விவசாய கிண றுகள் மற்றும் போர்வெல்களில் அதிகளவு பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்க வாய்ப்பு உள்ளது.விவசாயத்திற்கும், குடிநீருக்கும் தட்டுப்பாடு இன்றி தண்ணீர் கிடைக்க வாய்ப்பு உள்ளதால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### மழை நீரில் மூழ்கியவெங்காய செடிகள்

திண்டிவனம்:திண்டிவனம் பகுதியில் பெய்த கனமழையால் வெங்காய செடிகள் நீரில் மூழ்கியுள்ளது.திண்டிவனம் அருகே உள்ள நல்லம்பாக்கம், நகர் ஆகிய கிராமங்களில் கடந்த மாதம் விவசாயிகள் வெங்காய பயிர் சாகுபடியை துவங்கினர். இப்பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த கனமழையால், வெங்காயம் பயிர் செய்துள்ள நிலங்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது.இதனால் வெங்காய தாள்கள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது.

### கைதிகளை நல்வழிப்படுத்த புது திட்டம் வளமான எதிர்காலம்! இயற்கை நுண்ணுயிர் உரம் தயாரிப்பு

கோவை:கைதிகளின் தண்டனை காலத்தை உருப்படியாக செலவழித்து, அவர்களின் பொருளாதார தேவைகளை நேர்மையான முறையில் பூர்த்தி செய்து கொள்ளவும், வெளியே செல்லும்போது சமுதாயத்தில் சிறந்த மனிதர்களாக அடையாளம் காட்டும் நோக்கிலும், சிங்காநல்லூர் திறந்தவெளிச் சிறையில் இயற்கை நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் பயிற்சி துவக்கப்பட்டுள்ளது.

கோவை மத்திய சிறையில் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் கொலை, கொள்ளை, திருட்டு, கற்பழிப்பு உள்ளிட்ட குற்ற சம்பவங்களின் பின்னணி கொண்ட கைதிகள் 2,500க்கும் மேற்பட்டோர் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு உயர்கல்வி, தொழிற்பயிற்சி கல்வி, பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு வழங்கப்பட்டு வருகிறது. இதேபோல், சிங்காநல்லூர் திறந்தவெளிச் சிறையில், தமிழகத்தின் பல்வேறு சிறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 36 கைதிகள் உள்ளனர். இச்சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களுக்கு விவசாயப் பயிற்சிகளுடன், இயற்கை மண்வள பாதுகாப்பு, நீர் மேலாண்மை, இடுபொருள் சிக்கனம், ஆடு, மாடு வளர்த்தல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சிறையில் மொத்தமுள்ள 30.72 ஏக்கர் நிலத்தில், 20.72 ஏக்கரில் காய்கறி பயிரிடப்பட்டு, கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு தேவையான உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம் ஆண்டுக்கு 14 லட்சம் ரூபாய் வரை வருமானம் ஈட்டப்படுகிறது.
இதன் அடுத்தகட்டமாக, தற்போது இயற்கை நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் பயிற்சியும் துவக்கப்பட்டுள்ளது. திட்டம் குறித்து கோவை சிறைத்துறை டி.ஐ.ஜி., கோவிந்தராஜன் கூறியதாவது:
கைதிகள் உற்பத்தி செய்யும் பொருட்களை கொண்டு சிறை கைதிகளின் உணவு தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. ரசாயன உரங்களை தவிர்த்து, இயற்கையான வகையில் உற்பத்தி செய்ய, நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் பயிற்சி துவக்கப்பட்டுள்ளது. தனியார் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தில், சிறையின் உணவுக்கழிவுகள், நாட்டு சர்க்கரை, மாட்டுக் கோமியம், மாட்டுச்சாணம், தயிர் மற்றும் நுண்ணுயிர் உள்ளிட்டவற்றை சேர்த்து, இயற்கை நுண்ணுயிர் உரம் தயாரிக்கப்படுகிறது. சிறையிலுள்ள மாடுகளின் சாணத்தை கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.  கைதிகள் தயாரிக்கும் இயற்கை நுண்ணுயிர் உரம், திறந்தவெளி சிறையில் மேற்கொள்ளும் விவசாய பயன்பாட்டுக்கு பயன்படுத்தப்படும். இப்பயிற்சியின் மூலம் சிக்கனமான சிறந்த இயற்கை நுண்ணுயிர் உரமும், சிறந்த விளைச்சலும், அதிக லாபமும் கிடைக்கும். இத்திட்டம்

கைதிகள் பொருளாதார ரீதியாக மேம்படுத்தவும் உதவியாக இருக்கும்.
இவ்வாறு, அவர் கூறினார்.
திறந்தவெளிச் சிறையில் பணியாற்றும் கைதிகளின் தண்டனை காலம் பாதியாக குறையும். இச்சிறையில் தண்டனை கைதியாக இருந்து, விவசாயம் தொழில் செய்த 13 பேர், தற்போது சுயதொழில் செய்து சமுதாயத்தில் நல்ல நிலையை அடைந்துள்ளதாக சிறைத்துறை வட்டாரங்கள் கூறுகின்றன. சிறையில் அடுத்தகட்டமாக தேனீ வளர்ப்பு, காளான் வளர்ப்பு, கோழி வளர்ப்பு உள்ளிட்ட பயிற்சிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## வேளாண்மை பொறியியல் துறை கருவிகள் பெற அலைச்சல்: அலுவலகத்தை மாற்ற கோரிக்கை

திருக்கழுக்குன்றம்:வேளாண்மை பொறியியல் துறை மூலம் வழங்கப்படும் விவசாய பொறியியல் கருவிகளை பெறுவதற்காக, சென்னைக்கு செல்ல வேண்டியுள்ளதால், அந்த அலுவலகத்தை, திருக்கழுக்குன்றத்திற்கு மாற்ற வேண்டும் என, விவசாயிகள் கோரி உள்ளனர்.
காஞ்சிபுரம் மாவட்டம் காஞ்சிபுரம், மதுராந்தகம், நந்தனம் ஆகிய 3 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு வேளாண் பொறியியல் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒன்றியங்கள் காஞ்சிபுரம் மண்டலத்தில் காஞ்சிபுரம், உத்திரமேரூர், வாலாஜாபாத், ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியங்களும் மதுராந்தகம் மண்டலத்தில் மதுராந்தகம், லத்தூர், சித்தாமூர், அச்சிறுப்பாக்கம் ஆகிய ஒன்றியங்களும், நந்தனம் மண்டலத்தில் திருக்கழுக்குன்றம், திருப்போரூர், காட்டாங்குளத்தூர், குன்றத்தூர், புனித தோமையர்மலை ஆகிய ஒன்றியங்களும் உள்ளன. நடைமுறை இந்த பகுதிகளில் உள்ளவர்கள் வேளாண்மை பொறியியல் துறை மூலம் வழங்கப்படும் விவசாய தொழில்நுட்ப கருவிகளை பெறுவதற்கு அந்தந்த மண்டலங்களில் முன்பதிவு செய்ய வேண்டும்.

இந்நிலையில் நந்தனம் மண்டலத்தில் உள்ள குன்றத்தூர், புனித தோமையர்மலை ஆகிய ஒன்றியங்கள் நகரமாக வளர்ச்சி பெற்று விவசாயம் குறைந்து விட்டது. 15 ஊராட்சிகள் மாநகரத்துடன் இணைக்கப்பட்டு விட்டன.

காட்டாங்குளத்தூர், திருப்போரூர் வட்டத்திலும் தொழிற்சாலைகள், குடியிருப்புகள் ஆகியவை வளர்ந்து விவசாயம் குறைந்து வருகிறது.

திருக்கழுக்குன்றம் மட்டும் விவசாயத்திற்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இப்பகுதியில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் நெல், கரும்பு, மணிலா, காய்கறிகள் போன்றவை பயிரிடுகின்றனர். அவசியம் இதனால், விவசாயத்திற்கான பொறியியல் இயந்திரங்கள், கருவிகள், மானியங்கள் போன்றவை விவசாயிகளுக்கு அத்தியாவசியமாக உள்ளது. விவசாயிகளுக்கு, இவற்றை வழங்கும் வேளாண்மை பொறியியல்

துறை நந்தனத்தில் இயங்குகிறது. திருக்கழுக்குன்றம் பகுதி விவசாயிகள், மானிய விவரங்களை அறிதல், விண்ணப்பித்தல், பங்கு தொகை செலுத்துதல், மானிய பட்டியலில் பெயர் சேர்க்கை விவரம் அறிதல், மானியம் பெறுதல், வாடகை இயந்திரங்கள் பெறுதல் ஆகியவற்றிற்காக சென்னைக்கு செல்ல வேண்டியுள்ளது. பாதிப்பு இதனால் பணம் மற்றும் கால விரயம் போன்ற பிரச்னைகளால் விவசாயிகள் கடுமையாக  பாதிக்கப்படுகின்றனர். எனவே, சென்னை நந்தனத்தில் இயங்கும் வேளாண்மை பொறியியல் மண்டல அலுவலகத்தை, விவசாயம் நடைபெறுகின்ற, திருக்கழுக்குன்றம் வட்டத்திற்கு மாற்ற வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**12.08.2013**

**சாகுபடி குறைந்ததால் விலை விர்... வெற்றிலை ஒரு மூட்டை 10 ஆயிரம்**



தர்மபுரி: தர்மபுரி மாவட்ட வெற்றிலை கோவை, ஈரோட்டிற்கு செல்கிறது. ஒரு மூட்டை அதிகபட்சம் 10 ஆயிரத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. தமிழகத்தில் தூத்துக்குடி, நாமக்கல், சேலம், கரூர், திருச்சி, தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. இதில், தர்மபுரி முன்னிலை வகிக்கிறது. தர்மபுரி மாவட்டம் முழுவதும் 400 ஏக்கருக்கு மேல் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் வெற்றிலை சேலம், ஈரோடு, கோவை, பவானி உள்ளிட்ட இடங்களுக்கு வாரத்தில் நான்கு நாட்கள் லோடு செல்கிறது. வாரம் 100 லோடுக்குமேல் வெற்றிலை செல்கிறது. ஒரு கட்டு 30 முதல் 60 வரை விற்பனை செய்யப்படுகிறது. வெற்றிலை வியாபாரி சிவக்குமார் கூறுகையில்,''மழை இல்லாமல் வெற்றி லை சாகுபடி பரப்பு குறை ந்து விட்டது. கிணற்று பாசனத்தில் சாகுபடி செய்யப்பட்ட வெற்றிலை இப்போது அறுவடை செய்யப்படுகிறது. செலவு அதிகரி த்து, வருவாய் குறைந்துள்ளது. ஒரு மூட்டை வெற்றிலை கடந்த

வாரம் 3 ஆயிரம் முதல் 7 ஆயிரம் வரை விற்பனை செய்யப்பட்டது. நேற்று ஒரு மூட்டை வெற்றிலை 3 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரை விற்பனை செய்யப்பட்டது'' என்றார்.

**உற்பத்தி குறைவால் டன்னுக்கு ஆயிரம் ரூபாய் உயர்வு ஏற்றத்தில் மரவள்ளி கிழங்கு**



பரமத்திவேலூர்: பரமத்தி வேலூர் தாலுகாவான கீழ் சாத்தம்பூர், பெருமாம்பாளையம், வாழவந்தி, பாலப்பட்டி, ஆரியூர், மாரக்காசாம்பட்டி உள்ளிட்ட சுற்றுப்பகுதிகளில் உள்ள விவசாயிகள் கிணற்று பாசனத்தை நம்பி சுமார் ஆயிரம் ஏக்கரில் மரவள்ளிக்கிழங்கு பயிரிட்டு வருகின்றனர். ஒருவருட பயிரான மரவள்ளியை வாங்க சேலம், நாமக்கல், தர்மபுரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த மொத்த வியாபாரிகள் ஏக்கர் கணக்கில் விலைபேசி அறுவடை செய்து எடுத்துச் செல்கின்றனர். பின்னர் இவர்கள் சேகோ தொழிற்சாலைகளுக்கும், கிழங்கு சிப்ஸ் தயாரிக்கும் நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கின்றனர்.

இதன்படி கடந்த வாரம் ஒரு டன் மரவள்ளி ரூ. 12 ஆயிரத்துக்கு விற்றது. இந்த வாரம் ரூ. 13 ஆயிரத்துக்கு விலை போனது. கடந்த சில மாதங்களாக போதிய மழை இல்லாததால் விளைச்சல் குறைந்து போனது. தற்போது 3 மாதத்திற்கு ஒரு முறை 500 டன் மரவள்ளி விற்பனைக்கு வரும் நிலையில் தற்போது வெறும் 50

டன் மட்டுமே வருவதாக கூறும் வியாபாரிகள், ஆற்றுப்பாசனமும், கிணற்றுப்பாசனமும் கைகொடுக்க வில்லை. இதனால் உற்பத்தி குறைந்து மரவள்ளி மொத்த விலையில் ஒரு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் விலை கூடியுள்ளது. இதனால் மரவள்ளி விவசாயிகள், வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.